**செய்தி வெளியீடு எண்: 117/2023** **நாள்: 21.10.2023**

## சென்னையில் நடைபெறவிருக்கும் ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் அணிகளுக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு மெட்ரோ இரயில் சேவை நீட்டிப்பு

13-வது உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில், ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் அணிகள் விளையாடவுள்ள போட்டி, சென்னை சேப்பாக்கம் எம்.ஏ சிதம்பரம் மைதானத்தில் 23.10.2023 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதனையொட்டி, சென்னை மெட்ரோ இரயிலில் பயணிக்கும் கிரிக்கெட் ரசிகர்களுக்கான பயண போக்குவரத்து செலவினத் தொகையை தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் ஏற்றுள்ளது.

அதன்படி, போட்டியினை பார்த்துவிட்டு திரும்பும் ரசிகர்களின் வசதிக்காக, மெட்ரோ இரயில் சேவை வழக்கத்தை விடவும் கூடுதலாக ஒரு மணி நேரம், அதாவது, 23.10.2023 இரவு 12.00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும், ரசிகர்கள், போட்டிக்கான டிக்கெட்டினை பயன்படுத்தி எவ்வித கட்டணமும் இன்றி மெட்ரோ இரயிலில் பயணம் மேற்கொள்ளலாம். சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள தானியங்கி கட்டண வாயிலில் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் போட்டிக்கான டிக்கெட்டில் உள்ள பார்கோடு இன்றியமையாததாக இருப்பதால், பயணிகள் போட்டி டிக்கெட்டை சேதம் அடையாமல் பாதுகாப்பாக பயன்படுத்துமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கேட்டுக்கொள்கிறது.

**நீட்டிக்கப்பட்ட மெட்ரோ இரயில் சேவை:**

**நீலவழித்தடம்**: பயணிகள் எண்ணிக்கையின் அடிப்படையில் அரசினர் தோட்டம் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து விமான நிலையம் மற்றும் விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையம் நோக்கி இரயில்கள் இயக்கப்படும்.

**பச்சை வழித்தடம்**: புரட்சி தலைவர் டாக்டர்.எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்து பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையம் வரை 15 நிமிட இடைவெளியில் மெட்ரோ இரயில்கள் இயக்கப்படும்.

போட்டி நாளான 23.10.2023 இரவு 11.00 மணி முதல் 12.00 மணி வரை பச்சை வழித்தடத்தில் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்து நேரடியாக விமான நிலையம் மெட்ரோ செல்லும் இரயில் சேவை இயக்கப்படாது. உலக கோப்பை கிரிக்கெட் ரசிகர்கள், இதற்கேற்ப தங்களது பயணத்தினை திட்டமிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**